# OA : 54 of 2020

**"Collectors order is ignored as sewage water is mixed in rainwater drainage"**

www.dinamalar.com | சென்னை | • வியாழன் • ஜனவரி 6 2022

# மழை நீர் கால்வாயில் கழிவு நீர் காற்றில் பறக்குது கலெக்டர் உத்தரவு

**பூந்தமல்லி, ஜன. 6–**

பூந்தமல்லியில், நெடுஞ்சாலை ஓரத்தில் உள்ள மழை நீர் கால்வாய் மூடிகளை திறந்து, கழிவு நீரை விடும் லாரிகளின் அட்டூழியம், நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

பூந்தமல்லி மற்றும் சுற்றியுள்ள குடியிருப்புகள், தொழிற்சாலைகளில் இருந்து எடுக்கப்படும் 'செப்டிக் டேங்க்' கழிவை, திருமழிசையில் உள்ள சுத்திகரிப்பு நிலையத்தில் கொட்ட வேண்டும் என, திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ் உத்தரவிட்டுள்ளார்.

இதற்காக, பூந்தமல்லி தாசில்தார் தலைமையில் குழு அமைக்கப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வந்தது. சமீபகாலமாக, இக்குழு முறையாக செயல்படாததால், கழிவு நீர் லாரிகளின் அட்டகாசம் மீண்டும் தலையெடுத்து உள்ளது.



■ மழைநீர் கால்வாயின் மூடியை திறந்து. கழிவு நீரை விடும் லாரி. இடம்: பூந்தமல்லி.

கலெக்டரின் உத்தரவை மீறி, சட்டவிரோதமாக கண்ட இடங்களில், 'செப்டிக் டேங்க்' கழிவை விடுகின்றனர்.

பூந்தமல்லி நெடுஞ்சாலையில், ஓரத்தில் உள்ள மழை நீர் கால்வாய் மூடிகளை திறந்து, அதில், கழிவு நீரை கலந்து அராஜகம் செய்கின்றனர்.

லாரி உரிமையாளர்களுடன் சமரசம் செய்து கொள்வதால், போலீசாரும், வருவாய் துறையினரும் கண்டுக்கொள்வதில்லை என, அப்பகுதி மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

இதனால், அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதோடு, சுகாதார சீர்கேடு ஏற்பட்டு, தொற்று நோய் பரவும் சூழல் அதிகரித்துள்ளது. நிலத்தடி நீரும் மோசமாகியுள்ளது.

இது குறித்து, மாவட்ட நிர்வாகம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என, அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**News Item in Dinamalar newspaper, Chennai Edition dated 06th January 2022**

**CHENNAI:** In Poonamallee, the atrocities of lorries dumping sewage by opening rainwater drain lids on the side of the highway are increasing day by day. Tiruvallur District Collector Alby John Varghese has ordered that the ‘septic tank’ waste from Poonamallee and surrounding residence and factories be dumped at a treatment plant in Thirumalisai. To this end, a team led by Poonamallee Tashildar was formed and monitored. Recently, as this team doesn’t function properly, the atrocity of waste water Lorries has re-emerged. People in the area have complained that the police and the revenue department have compromised with owners of waste water Lorries. As a result, the area is stinking, causing health problems and increasing the spread of infectious diseases. Groundwater has also deteriorated. The people of the area have demanded that the district administration take immediate action in this regard.